சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை– திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16–ம் நாள் செவ்வாய்கிழமை

வழக்கிடை மனு எண்.01/2024 in அசல் வழக்கு எண்.92/2024

1. ஜைனப்பீவீ ...மனுதாரர்/1ம் வாதி

2. சையத் பீர் பாஷா (இறந்தவர்) .... மனுதாரர்/2ம் வாதி

3. ரேஹானா

4. அனிஸ் பாத்திமா

5. அம்ரீஷ்

6. கன்சூல்மக்ரிபா .... 3, 7 உத்தேசபார்ட்டிகள்

7. கிபாயத்துல்லா ..... 2ம் வாதியின் வாரிசுகள்

/எதிர்/

1. முகமதுகாதர்

2. அமீர்ஜான் (இறந்தவர் – வாரிசு சேர்க்கவில்லை)

..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 13.02.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/1ம்வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எச்.ஷாஜஹான் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

**உத்தரவு**

கடந்த 16.04.2022ம் தேதியில், இறந்த 2ம் வாதியின் வாரிசுகளான 3, 4, 5, 6, 7 வாதிகளை சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஏற்பட்ட 701 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவினை ஏற்று தகுந்த உத்தரவு பிறப்பிக்ககோரி காலவரையரை சட்டப் பிரிவு 5—ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/1ம் வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்—**

தான் மேற்சொன்ன அசல் வழக்கில் 1ஆம் வாதி என்றும், இந்த மனுவில் மனுதாரர் என்றும், தனது சகோதரர்களான பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களிடமிருந்து தாவா 14 கடைகளிலிருந்து 1/5 பாகம் கோரியும், அச்சொத்தில் கடன் பெறக்கூடாது, வேறுயாருக்கும் உரிமை மாற்றம் செய்யக்கூடாது என உத்தரவு கோரி தாவா தொடர்ந்து உள்ளதாகவும், மேற்படி தாவா நிலுவையில் இருக்கும்போது 2ம் வாதி திடீரென உடல்நலமின்றி 16.04.2022 அன்று இறந்துவிட்டதாகவும், அதனால் 2ம் வாதியின் மனைவி மக்களை 2ம் வாதியின் வாரிசுகளாக தாவாவில் சேர்த்து வழக்கு நடத்த வேண்டி 16.04.2022 முதுல் 14.07.2022க்குள் மனுதாக்கல் செய்யபடாமல் 15.07.2022லிருந்து 12.09.2022 வரை அபேட்மெண்ட் கடந்த 13.09.2022 முதல் 14.08.2024 வரை 701 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டதாகவும், இது தெய்வாதீனமானது என்றும், எனவே காலம் சென்ற 2ம் வாதியின் வாரிசுகளை தாவாவில் 3, 4, 5, 6, 7 வது வாதிகளாக சேர்ப்பதின் அபேட்மெண்ட் காலம் போக மேற்கொண்டு ஆன 701 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்:–</u>**

**(3.1)** மனுதாரர் இந்த மனுவினை 2ம் மனுதாரரான சையத்பீர் பாஷா கடந்த 16.04.2022 அன்று இறந்துவிட்டதாகவும், அவர் தன்னுடைய வாரிசுகளான 3 முதல் 7 மனுதாரர்களை விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 2ம் மனுதாரரின் வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்கவில்லை என்றும், அதனால் 701 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாகவும், மற்றும் வாரிசுகளை உரிய காலத்தில் தாவாவில் சேர்க்காததால் அபெட்மெண்ட் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், 2ம் எதிர்மனுதாரர் சையத்பீர்பாஷா 16.04.2022 அன்று இறந்துவிட்டதாகவும், அவர் 3 முதல் 7 மனுதாரர்களை தன்னுடைய வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், 2ம் மனுதாரர் 1ம் மனுதாரரின் குமாரராவார் என்றும், 1ம் மனுதாரரும் 2ம் மனுதாரரும் சேர்ந்து தாவா சொத்துக்களில் தங்களுக்கு பாகம் இருப்பதாகவும், தங்களுக்குண்டான பாகத்தை பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வாறு மேற்படி இருவரும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் மனுதாரர் இறந்துவிட்டதாகவும், 2ம் மனுதாரரின் வாரிசுகள் இந்த வழக்கில் உரிய காலத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும், 1ம் மனுதாரருக்கு 2ம் மனுதாரர் இறந்துவிட்ட விவரம் நன்கு தெரியும் என்றும், ஆனால் 1ம் மனுதாரரோ அவ்வாறு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 3 முதல் 7 மனுதாரர்களும் தங்களை இந்த வழக்கில் உரிய பார்ட்டியாக சேர்ப்பதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) மனுதாரர்கள் இந்த மனுவினை 2ம் மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளை சேர்ப்பதற்கு 701 நாள் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாக கண்டு தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் மேற்படி காலதாமதம் எதனால் ஏற்பட்டது என்ற காரணத்தை மனுவில் கூறவில்லை என்றும், அதனால் உரிய காரணம் கூறாமல் மனுதாரர்கள் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**4. தற்போது இங்கு தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்.–**

**(i) மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளவாறு 701 நாட்கள் காலதாமதம் மன்னிக்கத்தக்கதா?**

**(ii) உபய மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் எவை?**

**5. தற்போது பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகின்றது.**

**பிரச்சனை எண்.1–**

**மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளவாறு 701 நாட்கள் காலதாமதம் மன்னிக்கத்தக்கதா?**

(i) வழக்கு ஆவணங்களை உற்றுநோக்கும்போது மேற்படி 2ம் வாதி சையத்பீர்பாஷா 16.04.2022 அன்று இறந்துவிட்டதாகவும், அவர் தன்னுடைய மனைவியான 2ம் மனுதாரரையும், குமாரத்திகளான 3 முதல் 7 மனுதாரர்களையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், எனவே மேற்படி மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 701 நாட்கள் காலதாமத்தை மன்னிக்ககோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

(ii) மனுதாரர்கள் தரப்பில் வாதம் யாதெனில் 1–ம் மனுதாரருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்துவிட்டதாகவும், மேலும் இவ்வழக்கின் வழக்கறிஞரை சந்தித்து வாரிசு மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 701 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், எனவே அந்த காலதாமதத்தை மன்னித்து இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் ஆஜராகி வழக்கை எதிர்கொண்டு நடத்துவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்றும், இல்லையேல் மனுதாரர்களுக்கு பெருத்த பொருள் நஷ்டமும், மன கஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் வாதிட்டார்.

(iii) எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர்கள் பொய்யான காரணத்தை கூறி மனு தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி காலதாமதத்திற்கு மனு அபிடவிட்டில் சொல்லியுள்ள காரணங்களுக்கு ஆதாரம் இல்லை என்றும், எனவே எதிர்மனுதாரரை ஏமாற்ற வேண்டியும், எதிர்மனுதாரரை அலைகழிக்க வேண்டியும் உண்மையில்லாத காரணத்தை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல என்றும், எனவே இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

(iv) தற்போது மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையதா, அந்த காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது குறித்தும், மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள 701 நாட்கள் காலதாமதத்தை மன்னித்தும் மேலும் கால்வலி காரணமாக வழக்கறிஞரை சந்தித்து வாரிசு மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியுள்ளார்.

(v) இந்த மனுவை பரிசீலனை செய்து பார்க்கும்போது மனுதாரர்கள் காலதாமதப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டரா என்பதையும் உற்றுநோக்கவேண்டியுள்ளது. மனுதாரர்கள் இவ்வழக்கில் பங்குகொள்ளாமல் போனால் தங்களுக்கு சொந்தமான வழக்கு சொத்தை இழக்க நேரிடும், அவ்வாறு இருக்கையில் எதிர்மனுதாரர்கள் வேண்டுமென்றே காலம் கடத்தும் நோக்கில் மனு தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டார்கள் என்ற காரணம் ஏற்கும் விதத்தில் அமையவில்லை. காலதாமதம் எவ்வளவு நாட்கள் என்பதை பொருட்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும், அந்த காலதாமதத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கம் உள்ளதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று மாண்பமை உச்சநீதிமன்றத்தின் பல முன்னோடி தீர்ப்புகள் உள்ளது. மேலும் காலவரையறை என்பது தரப்பினரின் உரிமையை அழிக்கக்கூடியதாக இருக்கக்கூடாது என்றும், அவர்களுக்கு தேவையான பரிகாரம் வழங்கக்கூடிய வகையில் இருக்கவேண்டும் என்றும், காலவரையறை தீர்மானிக்கப்படவில்லை என்றால் வழக்கிற்கான காலம் நிர்ணயிக்கப்படாமல் போய்விடும் என்றும், காலவரையறை நிர்ணயம் செய்துள்ளதற்கு மிக முக்கியமான காரணம் வழக்கிற்கான காலம் நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும், அதேசமயம் தரப்பினர்களின் உரிமையை பாதுகாக்கும் வகையில் இருக்கவேண்டும் என்றும் உச்சநீதிமன்றத்தின் பல முன்னோடி தீர்ப்புகள் உள்ளது.

(vi) இந்த அசல் வழக்கின் 2–ம் மனுதாரர் கடந்த 16.04.2022ஆம் நாள் காலமாகிவிட்டதால், 2ம் மனுதாரரின் மனைவி உரிய காலத்திற்குள் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே 1ம் மனுதாரரின்

வாரிசுகளை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி காலவரையரைச் சட்டம் பிரிவு 5–ன் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர்., வாரிசுகளை சேர்க்க கோரி மனு தாக்கல் செய்வதில் 701 நாட்கள் காலதாமதம் மன்னித்தும், எனவே மேற்சொன்ன காலத்தை மேற்படி காலதாமதமாக கருத முடியாது. மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள காரணத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இத்தகைய மனுக்களை முடிவு செய்யும்போது தரப்பினர்களின் சூழ்நிலைகளை முழுமையாக கருத்தில் கொள்ளவேண்டும் என்றும், நீதியின் நலன் கருதி உத்தரவிடவேண்டும் என்று உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் பல முன் தீர்ப்புகள் உள்ளது. மாண்புமிகு உச்சநீதிமன்ற முன் தீர்ப்பில் AIR 1983 SC 355 என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

Order 22, Rule 4: The laws of procedure are devised for advancing justice and not impeding the same. Code of procedure is designed to facilitate justice and further its ends; not a penal enactment for punishment and penalties; not a thing designed to trip people up.

மேற்சொன்ன முன்தீர்ப்பின்படி நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

(vi) எதிர்மனுதாரர் இம்மனுவில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. 3 முதல் 7 மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலதாமதத்தையும் கருத்தில் கொண்டு செலவு தொகையாக 3 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரர் ரூ.1000/– செலுத்தும்பட்சத்தில் இம்மனுவை அனுமதிப்பதோடு, அசல் வழக்கை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிடுவது

நியாயமானதாக தோன்றுகிறது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>முடிவில்:-</u>

1ம் மனுதாரர், மற்றும் 3 முதல் 7 மனுதாரர்கள் எதிமனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ வருகின்ற 23.09.2025-ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். மீண்டும் இந்த மனு 24.09.2025 அன்று அழைக்கப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2025.09.16 05:02:17 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2025.09.16 05:02:24 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.